# II. பொருளாதார நிதிப் போக்குகள் — 1970

## (அ) தேசிய உற்பத்தியும் செலவும்

### 1. சுருக்கமும் மதிப்பீடும்

**மொத்தத் தேசிய உற்பத்தி**

தற்காலிக மதிப்பீடுகளின்படி நிலையான காரணி உற்பத்திகளின்படியான (1959) மொத்தத் தேசிய உற்பத்தி 1970இல் 4.1 சதவீதத்தால் உயர்ந்தது. 1969இல் ஏற்பட்ட 5.1 சதவீத உண்மை வளர்ச்சி வீதத்திலும் பார்க்க இந்த அதிகரிப்பு குறைவுடையதாகவேயிருந்தது. ஆனால் 1960-1969 இன் பத்தாண்டுகளிற் பொருளாதாரத்தில் நிலவிய 4.5 சதவீத சராசரி வீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது இது சாதகமானதாக விளங்குகிறது.

அட்டவணை II (அ) 1

நிலையான (1959) காரணி உற்பத்தி விலைகளின்படி
மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான அமைப்பு

| துறைகள் | 1959 | | 1969 | | 1970 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை (ப. இ. ரூ.) | சத வீதம் | தொகை (ப. இ. ரூ.) | சத வீதம் |
| 1. விவசாயம், வனவியல், வேட்டையாடுதல், கடற்றொழில் ... | 2,032 | 39.1 | 3,276 | 35.2 | 3,395 | 35.0 |
| 2. சுரங்கத் தொழிலும் குழித்தொழிலும் .. | 31 | 0.5 | 55 | 0.6 | 65 | 0.7 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 682 | 11.6 | 1,261 | 13.5 | 1,335 | 13.8 |
| 4. கட்டடவாக்கம் ... | 283 | 4.8 | 520 | 5.6 | 598 | 6.2 |
| 5. மின்சாரம், வளி, நீர், சுகாதாரப் பணிகள் ... | 10 | 0.2 | 18 | 0.2 | 21 | 0.2 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், செய்தித்தொடர்பு.. | 541 | 9.2 | 899 | 9.7 | 913 | 9.4 |
| 7. மொத்த, சில்லறை, வணிகம் | 801 | 13.6 | 1,367 | 14.7 | 1,391 | 14.3 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் ... | 51 | 0.9 | 114 | 1.2 | 118 | 1.2 |
| 9. குடியிருப்புகளின் உடைமை.. | 201 | 3.4 | 291 | 3.1 | 302 | 3.1 |
| 10. பொதுநிருவாகமும், பாதுகாப்பும் ... | 301 | 5.1 | 445 | 4.8 | 459 | 4.7 |
| 11. பணிகள் ... | 728 | 12.3 | 1,139 | 12.2 | 1,184 | 12.2 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 5,930 | — | 9,384 | — | 9,781 | — |
| 13. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் .. | – 37 | – 0.6 | – 66 | – 0.7 | – 85 | – 0.8 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி.. | 5,893 | 100.0 | 9,316 | 100.0 | 9,695 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

உண்மையான பொருளாதார வளர்ச்சியின் பகுப்பு உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வு செய்யும்போது விவசாயத்திலும், பணிகளிலும் சிறு அதிகரிப்புகள் ஏற்பட்டிருக்கையில் கட்டட அமைப்பிலும் தயாரிப்பிலும் ஏற்பட்ட வெளியீடுகை உயர்மட்டத்திலிருந்தது. 1970இல் விவசாயத்திலும் வனவியலிலும், கடற்றொழிலிலும் பெறப்பட்ட வெளியீடுகை 3.6 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்புநோக்குகையில் 1969இல் இது 0.9 சதவீதமாகவிருந்தது. இத்துறையில் நெல், உபஉணவுப் பயிர்கள் என்பனவற்றின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அதிகரிப்புகளைப் பதிவுசெய்தது. இவ்வாண்டில் தேயிலை உற்பத்தி எட்டாண்டுகளின் மிகக் கீழ் மட்டத்திற்கு வீழ்ச்சியுற்றபோது தெங்கு உற்பத்தி ஏறக்குறைய 1969இல் இருந்த அதே மட்டத்திலிருந்தது. இரப்பரைப் பொறுத்தவரை உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பு 5.5 சதவீதமாகவிருந்தது. மொத்தத் தேசிய உற்பத்தியின் ஒப்புநோக்குகையில் விவசாயத் துறையின் வெளியீட்டு வளர்ச்சி பெருமளவாகவிருப்பதால், இவ்வளர்ச்சி முழுமையான பொருளாதார வளர்ச்சியில் பெருமளவு செல்வாக்கை ஏற்படுத்துகிறது. 1970இல் விவசாயத்தின் அதிகரிப்பு 3.6 சதவீதமாகும். ஆனால் தயாரிப்புத் துறையின் விரிவுவீதம் குறைவாகவே சென்றுகொண்டிருந்தது. மூலப் பொருட்கள் குறைந்தளவு கிடைத்தமையே இத்துறையின் குறைந்த வீத வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். தேயிலைத் தயாரிப்பிலும் வீழ்ச்சியொன்றிருந்தது. எனினும், அரசாங்கத் துறையின் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் வெளியிடுகை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. உண்மை அடிப்படையில் கட்டட அமைப்புத் துறையில் 15.1 சதவீத அதிகரிப்பொன்று காணப்பட்டது. கட்டடப் பொருட்கள் பெருமளவு கிடைக்கத்தக்கதாய் இருந்தமையே இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். அரசாங்கத்திலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் தனியார் துறையிலும் கட்டடத் தொழிற்பாடு உயர்மட்டத்தில் இருந்தது.

விவசாயத்திலும், தயாரிப்பிலும் காணப்பட்ட பொருளாதாரத் தொழிற்பாடு, பணிகள் துறையின் தொழிற்பாட்டில் முக்கியமாக வர்த்தகப் போக்குவரத்துத் துறையிற் கீழ்நோக்கிய தாக்கத்தையுண்டுபண்ணிற்று. வேறிடத்திற் குறிப்பிடப்படாத பணிகளின் வெளியீட்டுப் பெறுமதி 1970இல் 3.9 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1969ஐ விடக் குறைவாகவிருந்தது. 1970இல் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்க நிருவாகம், நலத்துறை, கல்விப் பணிகள் ஆகியவற்றின் பெறுமதி குறிப்பிடத்தக்களவு உயர்ந்திருந்தது. ஒவ்வொரு துறையின் நடவடிக்கைபற்றிய விரிவான பகுப்பாய்வு பின்னால் கொடுக்கப்பட்டுள்ளது.

1970இல் ஏற்பட்ட உண்மையான வெளியீட்டு வளர்ச்சியை மதிப்பிடும்போது வர்த்தக மாற்று வீதத்திலேற்பட்ட மாற்றத்தை நாம் கணக்கில் எடுக்க வேண்டும். ஏற்றுமதிகளின் இறக்குமதித் திறனை மாற்றுவதே இதற்குக் காரணமாகும். 1970இல் இறக்குமதி விலைக் குறிகாட்டி 4.2 சதவீதத்தால் உயர்ந்திருக்கையில் ஏற்றுமதி விலைக் குறிகாட்டி 0.4 சதவீதத்தால் உயர்ந்தது. இதன் விளைவாக வர்த்தக மாற்றுவீதம் 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இதன் காரணமாக உண்மையான வெளியீடு 4.1 சதவீதத்தால் அதிகரித்திருக்க உண்மைத் தேசிய வருவாய் 3.4 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்திருந்தது.

1970இல் நடைமுறைக்காரணி உற்பத்தி விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 8.1 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. ஒப்புநோக்குகையில் உண்மை அடிப்படையிலேற்பட்ட அதிகரிப்பு 4.1 சதவீதமாகும்.

1970ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் இலங்கையின் குடித்தொகை 125 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1969இல் ஏற்பட்ட 2.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இந்த அதிகரிப்பு 2.1 சதவீதமாகும். நடைமுறை விலைகளின்படி தனியாள் நியதியில் மொத்தத் தேசிய உற்பத்தி 5.8 சதவீதத்தாலும், உண்மை நியதிகளில் 2.0 சதவீதத்தாலும் உயர்ந்துள்ளது.

**வளங்களும் பயன்பாடுகளும்**

1970இல் பொருளாதாரத்திற்குக் கிடைத்த, சந்தை விலைகளின்படியான உள்ளூர் உற்பத்தியையும் இறக்குமதிகளையும் உள்ளடக்கிய மொத்த வளங்கள் ரூ. 1,42,880 இலட்சத்திலிருந்து ரூ. 1,53,240 இலட்சத்திற்கு அதிகரித்தன. இது 7.2 சதவீதங்கொண்ட அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பு நுகர்ச்சி, மூலதன ஆக்கம், ஏற்றுமதிகள் என்பவற்றில் அதிகரிப்பை வெளிப்படுத்தியது. நடைமுறை விலைகளில் அளவிடப்பட்டபடி நுகர்ச்சி 7.2 சதவீதத்தாலும், மூலதன ஆக்கம் 10.6 சதவீதத்தாலும், ஏற்றுமதிகள் 4.0 சதவீதத்தாலும் அதிகரித்தன. எனினும் உண்மை நியதியில் வளங்கள் 1.7 சதவீதத்தால் அதிகரித்தபோது, நுகர்ச்சியும், மூலதன ஆக்கமும் முறையே 1.3 சதவீதத்தாலும், 1.2 சதவீதத்தாலும் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டது.

1969இன் நிலைமையுடன் ஒப்பிடும்போது 1970இல் வளங்களிலேற்பட்ட அதிகரிப்புக்கு உள்ளூர் உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பே முழுக் காரணமாகும்; இறக்குமதிகள் 11.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. இதன் விளைவால் மொத்த வளங்களில் மொத்த உள்ளூர் உற்பத்தியின் பங்கு 81.7 சதவீதத்திலிருந்து 83.1 சதவீதத்திற்கு அதிகரித்தபோது, மொத்த உள்ளூர் உற்பத்திக்கான இறக்குமதிகளின் விகிதம் 18.3 சதவீதத்திலிருந்து 16.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

1970இல் நிலையான மூலதன ஆக்கத்திலேற்பட்ட சிறிய அதிகரிப்பு இறக்குமதிகளின் உள்ளடக்கத்தின் மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. மத்திய வங்கியின் இறக்குமதி அளவுக் குறிகாட்டியின்படி (1967=100) 1970இன் நுகர்ச்சிப் பொருட்களின் அளவு 92.7 இலிருந்து 105.8 இற்கு அதிகரித்தபோது, முதலீட்டுப் பொருட்களின் அளவு 171.7 இலிருந்து 115.9 இற்கும், நடுத்தரப் பொருட்களின் அளவு 103.7 இலிருந்து 86.1 இற்கும் வீழ்ச்சியுற்றன. 1970இல் மொத்த உள்ளூர் மூலதன ஆக்கம் 1969இன் 35.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10.6 சதவீதத்தால் அதிகரித்தது. நுகர்ச்சியிலேற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக உணவும் குடிபானமும், ஆடைகள் என்பனவற்றிலேற்பட்டது.

உள்ளூர் உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வளங்களிலும் பார்க்க, நுகர்ச்சியினதும் மூலதன ஆக்கத்தினதும் கூட்டுக்கேள்வியானது மாற்றமுறாது உயர்ந்து வந்துள்ளதென்னும் விடயம் முன்னைய ஆண்டறிக்கைகளிற் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலை 1970இலும் காணப்பட்டது. 1970இல் மொத்த உள்ளூர்ச் செலவு மொத்தத் தேசிய உற்பத்தியை விட 3.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. ஒப்பியல்பாக 1969இல் இவ்வதிகரிப்பு 7.4 சதவீதமாகும். முன்னைய ஆண்டுகளைப்போல் இக்குறைவு வெளிநாட்டுக் கடன்பாடுகளினாலும், ஒதுக்குகளைக் குறைப்பதனாலும் நிரப்பப்பட்டது.

## 2. உற்பத்திப் போக்குகள்

**விவசாயம்**

தேயிலை

1970இல் தேயிலை உற்பத்தி 4,680 இலட்சம் இறாத்தல்களென மதிப்பிடப்பட்டது. இது 1969ஐ விட 160 இலட்சம் இறாத்தல்கள் அல்லது 3.3 சதவீதம் குறைவானதாகும். 1962இலிருந்து இதுவே மிகக் குறைந்த உற்பத்தி அளவாகும். 1965 இலிருந்து தேயிலை உற்பத்தி குறைந்து செல்லும் போக்கைக் காட்டுகின்றது. அவ்வாண்டிலுற்பத்தி 5,030 இலட்சம் இறாத்தல்களாகும். உற்பத்தியிலேற்பட்ட இவ்வீழ்ச்சிப் போக்குக்கு உற்பத்தியாளர்கள் சிறந்த விலைகளுக்காக உற்பத்தியைச் சீராக்கியமை முக்கிய காரணமாகும். பெரும்பாலான பெரிய தோட்டங்கள் தேயிலையின் தரத்தையும், விலையையும் சீர்செய்வதற்காகச் சிறந்த கொய்தல் முறையைக் கைக்கொண்ட

தாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேயிலை இலைகளை வாங்கும் தொழிற்சாலைகள் இலைகளின் தரத்தினை வலியுறுத்தியதன் காரணமாக சிறு தோட்டங்களின் உற்பத்தி குறைவுறுகின்றது. தேயிலை உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சிக்கு அண்மை ஆண்டுகளில் தேயிலைச் செய்கையில் உரங்களின் பயன்பாடு குறைந்துள்ளமையையும் காரணமாகக்கொள்ளலாம். 1970இல் உற்பத்தி இவ்வாண்டின் சில காலங்களில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளாலும் பாதிக்கப்பட்டது. ஏக்கருக்கான சராசரி விளைவு 1969இன் 845 இருத்தல்களுடன் ஒப்பிடுகையில் 1970இல் 811 இருத்தல்களாகும். 1970இல் உயர், நடுத்தரப் பிரதேசங்களில் உற்பத்தி வீழ்ச்சியுற்றிருக்கையில், தாழ்ந்த பிரதேசத் தேயிலை உற்பத்தி அதிகரித்தது.

1970இன் முடிவில் தேயிலையின் மொத்த நிலப்பரப்பு 5,97,499 ஏக்கர்களாகும்; இதில் பெறுபேற்றினைத் தந்த நிலப்பரப்பு 5,76,800 ஏக்கர்களாகும். 1970இல் மொத்தம் 6,858 ஏக்கர்கள் மறுநடுகை செய்யப்பட்டது; இதனுல் மறுநடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 40,286 ஏக்கர்களாகியது. மறுநடுகை மானியத் திட்டத்தின் கீழ்க் கொடுக்கப்பட்ட பணம் போதாததால், மறுநடுகையின் மேலதிகச் செலவை நிவர்த்தி செய்வதற்காகத் தேயிலைப் பெருந் தோட்டங்களுக்கும் கடன்வழங்கும்முகமாக அரசாங்க ஈட்டு வங்கிக்குத் தேயிலை மானிய நிதியிலிருந்து பணம் கொடுக்கப்பட்டது. அரசாங்க ஈட்டு வங்கியினுல் வழங்கப்பட்ட கடன்கள் 1969இன் 13,000 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 1970இல் 1,61,000 ரூபாய்களாகும்.

தொழிற்சாலை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் முன்னேற்றம் குறைவாக இருந்ததால், நவீனமயமாக்கலுக்காகப் பெறப்பட்ட வங்கிக் கடன்களின் மீது கொடுக்கப்படவேண்டிய வட்டியின் அரைப் பங்கினை மானியமாக வழங்குவதுடன் மேலதிகமாக அரசாங்கம் நவீனமயமாக்கத்தால் ஏற்பட்ட செலவின் மூன்றிஞெரு பங்கினை நன்கொடையாக வழங்குகின்றது. இத்திட்டங்கள் நவீனமயமாக்கும் வேகத்தின்மீது ஓரளவு தாக்கத்தை உண்டுபண்ணின. 1970இலே தொழிற்சாலை நவீனமயமாக்கும்திட்டத்தின்கீழ் கடன்களுக்கான விண்ணப்பங்களின் தொகை 1969இன் 139 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில் 293 இலட்சம் ரூபாவாக இருந்தது. 1970இல் உண்மையாக அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் ரூ. 89.6 இலட்சமாகும்; ஒப்பிடுகையில் 1969இல் 139 இலட்சமாகும்.

இரப்பர்

1970இல் இரப்பர் உற்பத்தி 3,510 இலட்சம் இருத்தல்களாகும்; இது 180 இலட்சம் இருத்தல்கள் அல்லது 5.4 சதவீதம் அதிகரிப்பாகும். இரப்பர் உற்பத்தி அதிகரிப்புக்குப் பெறுபேற்றினை அளிக்கத் தொடங்கிய மறுநடுகை செய்யப்பட்ட ஏக்கர்களின் அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இரப்பரின் மொத்த நிலப்பரப்பு 5,68,900 ஏக்கர்களாகும்; இதில் பெறுபேற்றினைத் தந்த நிலப்பரப்பு 4,96,210 ஏக்கர்களாகும்.

1970இல் மறுநடுகை செய்யப்பட்ட இரப்பர் நிலப்பரப்பு 10,210 ஏக்கர்களாகும்; இதனுல் மறுநடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 2,86,340 ஏக்கர்களை அல்லது மொத்த நிலப்பரப்பில் 50.3 சதவீதத்தை எய்தியது. 1970இல் ஏக்கரொன்றுக்கான சராசரி விளைச்சல் 707 இலட்சம் இருத்தல்கள் என மதிப்பிடப்பட்டது; ஒப்பிடுகையில் 1969இல் இது 673 இருத்தல்களாகும்.

1970இல் இரப்பர் மறுநடுகை மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொகை 1969இன் 166 இலட்சம் ரூபாயுடன் ஒப்பிடுகையில் ரூ. 179 இலட்சமாகும்.

தெங்கு

தெங்கு உற்பத்தி நேரடியான தரவுகள் இல்லாததனுல், ஏற்றுமதியினதும் உள்ளூர் நுகர்ச்சியினதும் தேங்காய்ச் சமநியதியின்படி மதிப்பிடப்பட்டது. சிறிய தோட்டங்கள் அதிகமானதால் ஆண்டடிப்படையில் உற்பத்தி

யின் நேரடி மதிப்பீடுகளைப் பெறுதல் இயலாததாகும். தெங்கு உற்பத்தி பற்றிய மத்திய வங்கியின் மதிப்பீடு, ஏற்றுமதிகளை அவற்றின் தேங்காய்ச் சமநியதிக்கு மாற்றுவதன் மூலமும், 1963இன் நுகர்ச்சியாளர் நிதி அளவையிலிருந்து பெறப்பட்ட தரவுகள் வாயிலாக உள்ளூர் நுகர்ச்சியை மதிப்பிடுவதன் மூலமும் பெறப்படுகின்றது. எனினும், 1969இல் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், உற்பத்தி 1968இன் மட்டத்தை ஒத்திருந்ததெனக் காட்டின. எனவே, 1969இல் பயன்படுத்தப்பட்ட உற்பத்தி மதிப்பீடு 1968ஐ ஒத்ததாகும். எனினும், தெங்குப் பொருட்களின் உள்ளூர் நுகர்ச்சியில் அதிகரிப்பொன்று ஏற்பட்டதென்பதற்குத் திடமான ஆதாரம் இல்லாததாலும், 1969இலும் 1970இலும் தேங்காய்ச் சமநியதியின்படி ஏற்றுமதி வீழ்ச்சியுற்றதாலும் இம்மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டது. எனவே, திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டின்படி தெங்கு உற்பத்தி 1969இல் 24,400 இலட்சம் தேங்காய்களாகும். இதே அடிப்படையில் 1970இல் தெங்கு உற்பத்தி 24,470 இலட்சம் தேங்காய்கள் என மதிப்பிடப்பட்டது. இது 0.3 சதவீத அதிகரிப்பாகும்.

1970இல் உரமானியத் திட்டமும், உயர்ந்த விளைவைக் கொடுக்கும் நாற்றுக்களை வழங்கும் திட்டமும் தொடர்ந்து நடைமுறையிலிருந்தன. தற்காலிக மதிப்பீடுகளின்படி 52,839 தொன் உரம் வழங்கப்பட்டது; ஒப்பியல்பாக இது 1969இல் 49,338 தொன்களாகும். இத்திட்டத்தின் கீழ் உரம் வழங்கும் இலக்கு 75,000 தொன்களாகும். 1970இல் வழங்கப்பட்ட உயர்ந்த விளைவைக் கொடுக்கும் நாற்றுக்களின் மொத்தம் 15,34,313 ஆகும். ஒப்பிடுகையில் 1969இல் 14,72,159 நாற்றுகள் வழங்கப்பட்டன.

நெல்

1970இல் நெல் உற்பத்தி 768 இலட்சம் புசல்களௌன மதிப்பிடப்பட்டது. இது 1969ஐ விட 109 இலட்சம் புசல்கள் அல்லது 16.5 சதவீதம் அதிகமானதாகும். 1969/70இல் பெரும் போகத்தில் நெல் உற்பத்தி 495 இலட்சம் புசல்களாகும். இது 1968/69இன் பெரும்போகத்தின் உற்பத்தியிலும் பார்க்க 25 இலட்சம் புசல்கள் அல்லது 5.3 சதவீதம் அதிகமாகும். 1970 சிறுபோகத்தில் உற்பத்தி 274 இலட்சம் புசல்களௌனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. 1969 சிறுபோகத்தின் 189 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடுகையில் இது 85 இலட்சம் புசல்கள் அல்லது 45.0 சதவீதம் அதிகமானதாகும்.

நெல்லுற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்புக்கு, பயிரிடப்பட்ட நிலப்பரப்பிலேற்பட்ட அதிகரிப்பும், களைபிடுங்கல், நாற்று நடல் ஆகிய முன்னேற்றமான செய்முறைகள் பரவியமை, சிறந்த உர வகைகள், விதை நெல் என்பனவற்றின் பாவனை ஆகியவற்றின் கூட்டு விளைவும் காரணங்களாகும்.

1969/70இல் பெரும்போகத்திற் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1,191 ஆயிரம் ஏக்கர்களாகும். 1969இன் 1,182 ஆயிரம் ஏக்கர்களுடன் ஒப்பிடும்போது இது 0.8 சதவீதம் அதிகமானதாகும். பெரும்பாலும் சாதகமான வானிலை நிலைமை காரணமாக 1970ல் சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 527 ஆயிரம் ஏக்கர்களினது 683 ஆயிரம் ஏக்கர்களுக்கு 29.6 சதவீதத்தால் அதிகரித்தது. ஏக்கருக்கான சராசரி விளைச்சல் 1968/69இன் பெரும்போகத்தின் 48.6 புசல்களுடன் ஒப்பிடுகையில் 1969/70 பெரும்போகத்தில் 52.2 புசல்களாகும். அதே வேளையில் 1970இன் சிறுபோகத்தில் ஏக்கருக்கான சராசரி விளைச்சல் 49.5 புசல்களௌனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. ஒப்பியல்பாக 1969 சிறுபோகத்தில் இது 48.2 புசல்களாகும். மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரம் 1969இல் 84,718 தொன்களிலிருந்து 1970இல் 88,085 தொன்களுக்கு அதிகரித்தது.

உப உணவுப் பயிர்கள்

1970இல் உப உணவுப் பயிர்களின் உற்பத்திப் பெறுமானம் 26.4 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வுற்பத்தியதிகரிப்பு மிளகு, மிளகாய், உருளைக்கிழங்கு வெங்காயம் என்பனவற்றிற் காணப்பட்டது. உப உணவுப் பயிர்களின் உற்

பத்தியிலேற்பட்ட அதிகரிப்புக்கு, உயர்ந்த உற்பத்தியாளர் விலைகளின் வாயிலாக அளிக்கப்பட்ட ஊக்கமும், கிடைக்கப்பெற்ற கொடுகடனின் அதிகரிப்பும் முக்கிய காரணங்களாகும். மிளகாய் அந்தரொன்றுக்கான சராசரி உற்பத்தியாளர் விலை ரூ. 76.16 ஆகும். ஒப்பியல்பாக 1969இல் அந்தரொன்றுக்கு ரூ. 71.68 ஆகும். 1970இல் உருளைக்கிழங்கு அந்தரொன்றுக்குச் சராசரி உற்பத்தியாளர் விலை ரூ. 60.19 இலிருந்து அந்தரொன்றுக்கு ரூ. 72.98 உக்கு அதிகரித்தபோது, மிளகின் விலை 1969இல் அந்தரொன்றுக்கு ரூ. 227.30 இலிருந்து 1970இல் அந்தரொன்றுக்கு ரூ. 381.98 இற்கு அதிகரித்தது.

உப உணவுப் பயிர்கள் உற்பத்திக்காக வழங்கப்பட்ட கடன்கள் 1968/69 இல் ரூ. 68 இலட்சத்திலிருந்து 1969/70இல் ரூ. 79 இலட்சத்திற்கு அதிகரித்தன. அதிகரிக்கப்பட்ட கொடுகடனின் பெரும்பகுதி மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்திகளுக்கானதாகும்.

### தயாரிப்புத் தொழில்

1970இல் தயாரிப்புத் தொழில் நடவடிக்கைகளிற் குறைந்து செல்லும் போக்குக் காணப்பட்டது. மத்திய வங்கியினுற் செய்யப்பட்ட மதிப்பீடுகளின் படி, கைத்தொழில் உற்பத்திப் பெறுமதி 1970இல் 8.4 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பியல்பாக 1969இல் அதிகரிப்பு 16.2 சதவீதமாகும். எனினும் அரசாங்கத்துறை தயாரிப்புக் கூட்டுத்தாபனங்களில் உற்பத்திப் பெறுமதி கணிசமான அளவு அதிகரித்தது தயாரிப்புத்துறையின் செயலாக்கம் பற்றிய விரிவான நுண்ணுய்வொன்று இவ்வறிக்கையின் வேறெரு பகுதியிற் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக மதிப்பீடுகளின்படி தயாரிப்புத் தொழிலின் மொத்தப் பெறுமதி உண்மை நியதியில் 5.9 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டது. ஒப்பியல்பாக 1969இல் இது 9.2 சதவீதமாகும். 1970இல் தயாரிப்புத் தொழிலின் மொத்தப் பெறுமதி (தேயிலை, இரப்பர், தெங்கு தவிர்ந்த) 9.6 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பியல்பாக 1969இல் இது 16.9 சதவீதமாகும்.

தனியார் துறைத் தயாரிப்புத்தொழில் நிலையங்களின் வெளியீட்டிற் குறைந்த வீத அதிகரிப்புக்கு மூலப்பொருட்கள் குறைந்தளவு கிடைத்தமையே முக்கிய காரணமாகும். தயாரிப்பாளர்கள் இவ்வாண்டின் முன்னரைப் பகுதியில் அதிக மூலப்பொருட்களைக் கையிருப்பாக வைத்திருந்ததால், இக்கையிருப்புக்களிலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் உயர்ந்தளவு உற்பத்தியினை எய்தியிருக்கக்கூடும்.

அரசாங்கத் துறைத் தயாரிப்புக் கூட்டுத்தாபனங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்கு, அவைகளின் உற்பத்தித் திறனிலேற்பட்ட அதிகரிப்பும், உற்பத்தித் திறனின் பயன்பாட்டிலேற்பட்ட அதிகரிப்பும், திறமையான நிருவாகமும் முக்கிய காரணங்களாகும். 1970இல் மொத்தத் தயாரிப்புத் தொழில் வெளியீட்டில் அரசாங்கத்துறைக் கூட்டுத்தாபனத்தின் பங்கு 31 சதவீதமென மதிப்பிடப்பட்டது.

தயாரிப்புத் தொழில் வெளியீட்டிலேற்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பு இரசாயனங்கள், பெற்ரோலிய உற்பத்திகள், இரப்பரும் பிளாத்திக்கு உற்பத்திகளும், உணவுத் தொகுதி ஆகியவற்றிலேற்பட்டது. இத்துறையின் போக்கில் குறிப்பிடத்தக்கவோர் அம்சம் யாதெனில், மொத்தத் தயாரிப்புத் தொழில் வெளியீட்டில் முதலீட்டு, நடுத்தரப் பொருட்களின் பங்கு அதிகரித்திருக்கையில், நுகர்ச்சிப் பொருட்கள் குறைவுற்றமையாகும்.

### கட்டடவாக்கம்

1970இல் கட்டடவாக்கம் நடவடிக்கைகள் உயர்மட்டத்திலிருந்தன. 1970இல் கட்டடவாக்கத்தின் மொத்தப் பெறுமதி உண்மை நியதியின்படி 15.1 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிடுகையில் 1969இல் அதிகரிப்பு 16.5

சதவீதமாகும். கட்டடவாக்க நடவடிக்கையிலேற்பட்ட அதிகரிப்பு தனியார் துறை, அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்ருல் பங்கு கொள்ளப்பட்டது. 1970இல் கட்டடவாக்க நடவடிக்கையின் உயர்ந்த நிலைக்குக் கட்டட மூலப் பொருட்கள் பெருமளவு கிடைத்தமையும், வீடமைப்புக்கும் ஏனைய கட்டடவாக்கங்களுக்கும் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியும் காரணங்களாகும். சீமெந்து உற்பத்தி 1969இல் 2,79,000 தொன்களுடன் ஒப்பிடுகையில் 1970இல் 3,21,000 தொன்களாகும். 1970இல் கட்டடங்களினதும் ஏனைய கட்டடவாக்கங்களினதும் பெறுமதி அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் 11.0 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், அரசாங்கத் துறையில் கட்டடவாக்கமும் உயர்ந்த மட்டத்தில் இருந்தது.

**பணிகள்**

1970இல் பணிகள் துறையில் முக்கியமாக வர்த்தகம், போக்குவரத்து என்பவற்றிற் பொருளாதார நடவடிக்கைகள் தாழ்ந்த மட்டத்திலிருந்தன. இதற்கு 1969உடன் ஒப்பிடுகையில் 1970இல் உள்ளூர் உற்பத்திகள், இறக்குமதிகள் என்பவற்றின் தாழ்ந்த மட்டம் காரணமாகக் கிடைக்கக்கூடிய பொருட்களின் நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். 1970இல் மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகம் என்பவற்றின் வெளியீட்டுப் பெறுமதி 1.8 சதவீதத்தாலும், போக்குவரத்தின் வெளியீட்டுப் பெறுமதி 1.5 சதவீதத்தாலும் அதிகரித்தன. போக்குவரத்துத் துறையிற் பொதுவான அதிகரிப்பு சிறிதாகக் காணப்பட்டபோது, இலங்கை போக்குவரத்துச் சபையினூலான பயணர் போக்குவரத்திலும், இலங்கை அரசாங்கப் புகையிரதத்தினூலான பொருட்களின் போக்குவரத்திலும் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டது. 1970இல் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பயணர் மைல்கள் 7.5 சதவீதத்தால் அதிகரித்தன. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நலத்துறை கல்விப் பணிகளிலும் விரிவொன்று காணப்பட்டது.

## 3. மொத்த வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

பின்வரும் அட்டவணை 1968, 1969, 1970ஆம் ஆண்டுகளில் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த மொத்த வளங்களையும், அவைகளின் பயன்பாட்டு அமைப்பையும் காட்டுகின்றது.

1970இல் உள்ளூர் உற்பத்தியையும், இறக்குமதிகளையும் கொண்டுள்ள மொத்த வளங்கள் 7.2 சதவீதத்தால் அதிகரித்தன. வளங்களிலேற்பட்ட அதிகரிப்புக்கு முழுவதும் உள்ளூர் உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இறக்குமதிகள் 11.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. உள்ளூர் உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக, கட்டடவாக்கம், சுரங்கத் தொழில் உட்பட தயாரிப்புத் தொழிலிலும் பார்க்குழித் தொழில் மின்சாரம், விவசாயம் என்பவற்றிலிருந்தும் ஏற்பட்டதாகும்

1970இல் இறக்குமதிகளின் பெறுமதி 11.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இறக்குமதிகளின் அமைப்பினைப் பொறுத்தளவில், அளவு நியதியில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 32.5 சதவீதத்தாலும் நடுத்தரப் பொருட்களின் இறக்குமதி 17.0 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. நுகர்ச்சிப் பொருட்களின் அளவு, குறிப்பாக உணவும், குடிபானமும் என்ற தொகுதி 15.2 சதவீதத்தால் அதிகரித்தது.

உண்மை நியதியில், உள்ளூர் உற்பத்தி 4.2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் இறக்குமதிகளின் பெறுமதி 14.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

வளங்களின் பயன்பாடுபற்றிய நுண்ணுய்வானது, ஏற்றுமதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் ரூ.21,520 இலட்சத்திலிருந்து ரூ. 22,370 இலட்சத்திற்கு அதிகரித்ததென்பதைக் காட்டுகிறது; இது 4.0 சதவீத அதிகரிப்பாகும். மூலதன ஆக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் 1969இல் 22,530

அட்டவணை II (அ) 2

மொத்த வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

| | 1968 | 1969 | 1970 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | 1969 | 1970 |
| அ. வளங்கள் | | | | | |
| மொத்த உற்பத்தி ... | 10,318 | 11,409 | 12,775 | + 10.6 | + 12.0 |
| பொருட்களினதும் காரணிக ளல்லாத பணிகளினதும் இறக்குமதிகள் ... | 2,474 | 2,879 | 2,549 | + 16.4 | – 11.5 |
| மொத்தம் ... | 12,791 | 14,288 | 15.324 | + 11.7 | + 7.2 |
| ஆ. பயன்பாடு | | | | | |
| நுகர்ச்சி ... | 8,958 | 9,884 | 10,595 | + 10.3 | + 7.2 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 1,668 | 2,253 | 2,492 | + 35.1 | + 10.6 |
| பொருட்களினதும், காரணிகளல் லாத பணிகளினதும் இறக்குமதிகள் | 2,165 | 2,152 | 2,237 | – 0.6 | + 4.0 |
| மொத்தம் ... | 12,791 | 14,288 | 15,324 | + 11.7 | + 7.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலட்சத்திலிருந்து 1970இல் 24,920 இலட்சத்திற்கு 10.6 சதவீதத்தால் அதிகரித்தபோது, நுகர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் 1969இல் 98,840 இலட்சத்திலிருந்து 1970இல் 1,05,950 இலட்சத்திற்கு 7.2 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், உண்மை நியதியில் நுகர்ச்சி 1.3 சதவீதத்தால் அதிகரித்தபோது, மூலதனவாக்கம், 1.2 சதவீதத்தால் அதிகரித்தது.

## 4. நடைமுறைக் காரணி உற்பத்தி நிலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

### நடைமுறை விலைகளின்படி உற்பத்திப் பெறுமதி

நடைமுறைக் காரணி உற்பத்தி விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகள் பின்னிணைப்பின் அட்டவணை 4இல் விவரமாகக் காட்டப்பட்டுள்ளன. 1968 இலிருந்து 1970 வரையான எண்தொகைகள் கீழே அட்டவணையிற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

தற்காலிகமான மதிப்பீட்டின்படி 1970இல் நடைமுறைக் காரணி உற்பத்தி விலைகளின் மொத்தத் தேசிய உற்பத்தி 8.1 சதவீதத்தால் அதிகரித்தது; ஒப்பியல்பாக 1969இல் அதிகரிப்பு 9.6 சதவீதமாகும். சென்ற ஆண்டுகளைப் போலன்றி மொ. தே உ. இலேற்பட்ட அதிகரிப்புக்கு எந்தவொரு தனித்துறையிலேற்பட்ட பெரியதோர் அதிகரிப்பையும் காரணமாகக் கொள்ளமுடியாது. பின்னிணைப்பு அட்டவணை 4இலே உள்ளவாறு விவசாயத்திலும், பணிகளிலும் சாதாரண அதிகரிப்புகள் காணப்பட்டபோது, தயாரிப்புத் தொழில், கட்டடவாக்கம் வெளியீடுகள் உயர்ந்த மட்டத்திலிருந்தன. 1970இல் மொ. தே. உ.

## அட்டவணை II (அ) 3

### நடைமுறைக் காரணி உற்பத்தி விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| துறைகள் | 1968 | 1969 | 1970 | சென்ற ஆண்டைவிடச் சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (ப. இ ரூ.) | | | 1969 | 1970 |
| 1. விவசாயம், வனவியல், வேட்டையாடுதல, கடற்றொழில்... | 3,656 | 3,732 | 3,949 | + 2.1 | + 5.8 |
| 2. தயாரிப்புத் தொழில், சுரங்கத் தொழிலும், பார்க்குழித் தொழிலும், மின்சாரம், வளி | 1,224 | 1,399 | 1,545 | + 14.3 | + 10.4 |
| 3. கட்டடவாக்கம் ... | 509 | 646 | 771 | + 26.9 | + 19.4 |
| 4. வர்த்தகம், போக்குவரத்து ஏனைய பணிகள் ... | 4,481 | 5,080 | 5,496 | + 14.3 | + 8.2 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 9,869 | 10,857 | 11,760 | + 10.0 | + 8.3 |
| 6. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் | - 61 | - 109 | - 142 | | |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி | 9,809 | 10,748 | 11,618 | + 9.6 | + 8.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இல் ஏற்பட்ட அதிகரிப்புக்கு, விலைகளிலேற்பட்ட அதிகரிப்பு ஓரளவுக்கும், உண்மை உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பு ஓரளவுக்கும் காரணங்களாகும்.

1970இல் விவசாயம், வனவியல், கடற்றொழில் என்பவற்றின் மொத்தப் பெறுமதி 1969இன் 2.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. உள்ளூர் விவசாயத்தில் நெல், உப உணவுப் பயிர்கள் பெறுமதி அதிகரிப்பொன்றினைக் காட்டின. 1970இல் நெல்லுற்பத்தி 768 இலட்சம் புசல்கள் என மதிப்பிடப்பட்டது. ஒப்பிடுகையில் 1969இல் 659 புசல்களாகும். இவ்வதிகரிப்புக்கு, 1970இல் மிகவும் சிறந்த சிறுபோக அறுவடை பெறப்பட்டதே முக்கிய காரணமாகும். 1970இல் உபஉணவுப் பயிர்களின் உற்பத்திப் பெறுமதி 26.4 சதவீதத்தால் அதிகரித்தது. பெருமளவிலான அதிகரிப்புகள் உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம், மிளகு என்பவற்றிற் காணப்பட்டன. 1970இல் உப உணவுப் பயிர்களின் கூட்டுப் பெறுமதியும் 26.4 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டது.

அண்மையாண்டுகளில் விவசாயத்திலேற்பட்ட அதிகரிப்புகளுக்கு, உயர்ந்த விலைகள் மூலம் வழங்கப்பட்ட ஊக்கத்தையும், விருத்திபெற்ற விவசாய நடவடிக்கைகளிற்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த கொடுகடன் வசதிகளின் கூட்டு விளைவையும் காரணங்களாகக் கொள்ளலாம். 1970இல் உள்ள விவசாயத்தின் கூட்டுப் பெறுமதி 9.1 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டது; ஒப்பியல்பாக 1969இன் அதிகரிப்பு 5.6 சதவீதமாகும்.

1970இல் ஏற்றுமதி விவசாயம் 1969இன் 3.3 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், 0.4 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலை உற்பத்தி 3.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றபோதும், தேயிலை ஏற்றுமதிகளின் சராசரி விலையிலும் அளவிலும் அதிகரிப்பொன்று காணப்பட்டது. இறப்பர் உற்பத்தியிலேற்பட்ட 5.5 சதவீதங்கொண்ட அதிகரிப்பு 1970இல் விலைகளிலேற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்யப் போதுமானவையாகவிருந்தது. 1970இல் தெங்குப் பொருள் உற்பத்தி 1969ஐ விட ஓரளவு அதிகரித்தது: மூன்று தெங்கு உற்பத்திகளின் விலைகள் அதிகரிப்புகளைப் பதிவுசெய்தன. ஏற்றுமதி விலைக்குறிகாட்டி மூலம் அளவிட்டபடி 1970இல் ஏற்றுமதி விலைகளின் சராசரி மட்டம் 0.4 சதவீதத்தால் அதிகரித்தது

1970இல் தயாரிப்புத் தொழிலின் கூட்டுப் பெறுமதி 1969 ஐவிட 10.4 சதவீதம் உயர்வானதாகும். 1970இல் தயாரிப்புத் தொழிலின் கூட்டுப் பெறுமதி (தேயிலை, இரப்பர், தெங்கு நீங்கலாக) 1969இன் 22.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப் பட்டது. எனினும், முன்பு விளக்கப்பட்டதுபோல், இத்துறையின் செயலாக்கத் தின் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில், அரசாங்கத்துறை கைத்தொழில்களின் முக்கியத்துவம் அதிகரித்தமையாகும். 1970இன் உற்பத்தியில் அரசாங்கத் துறை கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் கணிசமானவோர் அதிகரிப்பைப் பதிவுசெய்தன. சீமேந்து உற்பத்தியிற் பெருமளவிலான அதிகரிப்புக் காணப் பட்டபோது, பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தியும் மிகவும் உயர்ந்த மட்டத்திலிருந்தது. மூலப்பொருட்கள் குறைந்தளவில் கிடைத்தமையால் தனி யார் துறைக்கைத்தொழில் முயற்சிகளில் ஓர் வீழ்ச்சிப் போக்குக் காணப் பட்டது.

1970இல் கட்டடவாக்கத்தின் கூட்டுப்பெறுமதி 1969இன் 26.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 19.4 சதவீதத்தால் அதிகரித்தது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் கட்டடவாக்க நடவடிக்கைகளில் பெரும் அதிகரிப்புக் காணப்பட்டது. குடியிருப்பு, குடியிருப்பல்லாக் கட்டடவாக்கத்திற்கான அதி கரித்த கேள்வி காரணமாக, தனியார் துறையின் கட்டட நடவடிக்கையும் உயர்ந்த மட்டத்திலிருந்தது.

1970இல் பணிகள் துறையின் கூட்டுப் பெறுமதி 8.2 சதவீதத்தால் அதி கரித்தது. 1970இல் சிறியளவிலான உள்ளூர் உற்பத்தியும் இறக்குமதிகளிலேற் பட்ட வீழ்ச்சியும் கிடைக்கக்கூடியதான பொருட்களின் நிரம்பலில் வீழ்ச்சி யொன்றினையேற்படுத்தின. இக்காரணி 1970இல் பணிகள் துறையின் குறைந்த மட்ட நடவடிக்கைகளுக்குக் காரணமாகும். எனினும் அரசாங்கத்தால் வழங் கப்பட்ட நலத்துறை, கல்விப்பணிகளிற் பெருமதிகரிப்பொன்று காணப்பட்டது.

1970இல் மொத்த உள்ளூர் உற்பத்தி ரூ. 1,17,600 இலட்சமாக மதிப்பி டப்பட்டது. இது 1969ஐ விட 8.3 சதவீதங்கொண்ட அதிகரிப்பாகும். 1970 இல் இலங்கையிலிருந்து சென்ற காரண வருமானத்தின் தேறிய வெளிப்பாய்வு 1969இன் 1,090 இலட்சங்கொண்ட தேறிய வெளிப்பாய்வுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,420 இலட்சமாகும். காரண வருமானத்தின் தேறிய வெளிப்பாய்வுக்கு ஏற்ப உள்ளூர் உற்பத்தியைச் சீராக்கஞ் செய்வதன் வாயிலாகப் பெறப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி 1970இல் 1,16,180 இலட்சமாகும். இது 1969ஐ விட 8.1 சதவீதம் கொண்டவோர் அதிகரிப்பாகும்.

### 5. உண்மை உற்பத்தியும் உண்மை வருமானமும்

1968இலிருந்து 1970வரை உண்மை உற்பத்திகளின் மதிப்பீடுகள் பின்வ ரும் அட்டவணையிற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

1970இல் நிலையான (1969) காரணி உற்பத்தி விலைகளில் மொத்தத்தேசிய உற்பத்தி 4.1 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1960—69 வரைக் கான பத்தாண்டு காலப்பகுதிக்குரிய 4 5 சதவீதங்கொண்ட சராசரி அதிகரிப்பு வீதத்திலும் பார்க்க 0.4 சதவீதம் குறைவானதாகும்.

1970இல் விவசாயம், வனவியல், கடற்றொழில் ஆகியவற்றின் வெளியீடு 1969இன் 0.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தால் அதி கரித்தது. இவ்வதிகரிப்பு 1969உடன் ஒப்பிடுகையில் 1970இல் ஏற்றுமதி விவ சாய உற்பத்தியின் சிறிய மட்டத்தையும், உள்ளூர் விவசாய உற்பத்தியின் (முக்கியமாக நெல்லின்) உயர்ந்த மட்டத்தையும் வெளிக்காட்டுகின்றது.

சுரங்கத்தொழிலும், பார்க்குழித் தொழிலும், மின்சாரம், வளி போன்ற வற்றை உள்ளடக்கிய தயாரிப்புத் தொழிலின் உண்மை வெளியீடு 6.6 சத வீதத்தால் அதிகரித்தது. உண்மை வெளியீடு, அரசாங்கத்துறை தயாரிப்புத் தொழிலிலும், தனியார் தயாரிப்புத் தொழில் நிலையங்களிலும் அதிகரித்துள்ளது. மின்சார வெளியீட்டில் 25.9 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது.

## அட்டவணை II (அ) 4

### காரணி உற்பத்தி விலைகளின்படி (1959) மொத்தத் தேசிய உற்பத்தி

| துறைகள் | 1968 | 1969 | 1970 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் 1969 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் 1970 |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | | |
| 1. விவசாயம், வனவியல், கடற்றொழில் வேட்டையாடுதல் போன்றவை ... | 3,248 | 3,276 | 3,395 | + 0.9 | + 3.6 |
| 2. தயாரிப்புத் தொழில், சுரங்கத் தொழிலும், பார்க்குழித் தொழிலும், மின்சாரம் போன்றவை ... ... | 1,206 | 1,333 | 1,421 | + 10.5 | + 6.6 |
| 3. கட்டடவாக்கம் ... ... ... | 446 | 520 | 598 | + 16.5 | + 15.1 |
| 4. போக்குவரத்து, வர்த்தகம், ஏனைய பணிகள் ... ... ... | 4,000 | 4,255 | 4,366 | + 6.4 | + 2.6 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... .. | 8,900 | 9,384 | 9,781 | + 5.4 | + 4.2 |
| 6. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் ... ... ... | - 39 | - 68 | - 85 | | |
| 7. மொத்தத் தேறிய உற்பத்தி ... ... | 8,862 | 9,316 | 9,695 | + 5.1 | + 4.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*1970இல் கட்டடவாக்கத்தின் வெளியீடு 15.1 சதவீதத்தால் அதிகரித்தது. கட்டடவாக்க நடவடிக்கை அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், தனியார்துறை என்பவற்றில் உயர்வாகக் காணப்பட்டது. அரசாங்கத்திற்கான கட்டடவாக்க நடவடிக்கை முக்கியமாக விவசாயத்திலும், கூட்டுத்தாபனங்களின் நடவடிக்கை தயாரிப்புத் தொழிலிலும் காணப்பட்டன.*

*1970இல் தயாரிப்புத் தொழில், கட்டடவாக்கம் ஆகியவற்றின் தாழ்ந்த மட்டப் பொருளாதார நடவடிக்கையும், இறக்குமதி அளவிலேற்பட்ட வீழ்ச்சியும் பணிகள் துறையில் 2.6 சதவீத அதிகரிப்பை மட்டுமே ஏற்படுத்தின. 1969இல் இவ்வதிகரிப்பு 6.4 சதவீதமாகும். எனினும், நலத்துறை, சுகாதாரம், கல்வி ஆகியவற்றின் உண்மை வெளியீடு, இப்பணிகளின் விரிவின் காரணமாகக் கணிசமானளவு அதிகரித்தது.*

*1970இல் நிலையான விலைகளின்படி மொத்த உள்ளூர் உற்பத்தி 1969இன் 5.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கையிலிருந்து வேறுநாடுகளுக்குச் சென்ற காரணி வருமானத்தின் தேறிய வெளிப்பாய்வுக்கேற்பச் சீராக்கஞ் செய்வதன் வாயிலாகப் பெறப்பட்ட நிலையான விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி 1970இல் 4.1 சதவீதத்தால் அதிகரித்தது; ஒப்பியல்பாக 1969இல் இவ்வதிகரிப்பு 5.1 சதவீதமாகும். தேசிய வருமான மட்டத்தில் ஏற்றுமதிகளிலும் இறக்குமதிகளிலும் பெறுமதி முக்கிய பங்கினை வகிப்பதால் நிலையான விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி எற்றுமதிகளிலும், இறக்குமதிகளிலும் விலைகளின் அசைவுகளுக்கேற்பவே கணிப்பிட வேண்டும். 1970இல் இலங்கையின் வர்த்தக மாற்று வீதம் 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1970இல் இறக்குமதி விலைகள் 4.2 சதவீதத்தால் உயர்வுற்றபோது, இலங்கையின் ஏற்றுமதிகள் வாயிலாகப்பெறப்பட்ட விலைகள் 0.4 சதவீதத்தால் மட்டுமே உயர்வுற்றன. மத்திய வங்கியின் விலைகளின் குறிகாட்டிகளின்படி (1967=100) எல்லா இறக்குமதிகளின் விலைக் குறிகாட்டி 1969இல் 133.9 இலிருந்து 139.6உக்கு அதிகரித்தபோது எல்லா ஏற்றுமதிகளின் விலைக்குறிகாட்டி 1969இல் 117.3இலிருந்து 1970இல் 117.8 இற்கு அதிகரித்தது. 1970இல் இலங்கையின் வர்த்தகமாற்று வீதத்தின் பாத*

கமான போக்கின் விளைவால் வருமானத்தின் இழப்பு (அடிப்படையாண்டு 1959 இலிருந்து கணிக்கப்பட்டது) 1969இன் 8,137 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 9,027 இலட்சமென மதிப்பிடப்பட்டது. உண்மை உற்பத்திகளின் மதிப்பீட்டினைப் பாதகமான வர்த்தக மாற்று வீதத்தால் ஏற்படும் வருமான இழப்புக்கு ஏற்பச் சீராக்கஞ் செய்வதன் மூலம் பெறப்படும் உண்மைத் தேசிய வருமானம் 1970இல் 87,930 இலட்சமெனக் கணிக்கப்பெற்றது. 1969இல் இத்தொகை ரூ. 85,030 இலட்சமாகும்.

## 6. மொத்தத் தேசியச் செலவு

இலங்கையின் மொத்தத் தேசியச் செலவின் விவரமான மதிப்பீடுகள் பின்னிணைப்பின் அட்டவணை 8இல் காட்டப்பட்டுள்ளன. 1968 லிருந்து 1970 வரையான மொத்தத் தேசியச் செலவின் முக்கிய உறுப்புக்களையும் அவற்றின் மாற்றங்களையும் பின்வரும் அட்டவணை சுருக்கமாகத் தருகின்றது.

### அட்டவணை II (அ) 5

### நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசியச் செலவு

| விடயங்கள் | 1968 | 1969 | 1970 | சென்ற ஆண்டைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | 1969 | 1970 |
| 1. தனியார் நுகர்ச்சி ... ... | 7,550 | 8,412 | 8,946 | + 11.4 | + 6.3 |
| 2. அரசாங்க முயற்சி ... ... ... | 1,408 | 1,471 | 1,649 | + 4.5 | + 12.1 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ... | 1,668 | 2,253 | 2,492 | + 35.1 | + 10.6 |
| 4. வெளிநாட்டிற்றேறிய மாற்றம் ... | 10,626 | 12,137 | 13,086 | + 14.2 | + 7.8 |
| 5. வெளிநாட்டிற்றேறிய முதலீட்டம் ... | – 346 | – 797 | – 393 | | |
| 6. கழிக்க: பன்னாட்டுக் கொடைகளினதும் மாற்றல்களினதும் தேறிய வரவுகள் ... ... | – 23 | – 39 | – 60 | | |
| 7. மொத்தத் தேசியச் செலவு ... ... | 10,257 | 11,300 | 12,633 | + 10.2 | + 11.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி 1969இல் மொத்தத் தேசியச் செலவு ரூ. 1,13,000 இலட்சமென மதிப்பிடப்பட்டது; இது 10.2 சதவீதங் கொண்டவோர் அதிகரிப்பாகும். 1970இல் மொத்தத் தேசியச் செலவு ரூ. 1,26,330 இலட்சமென மதிப்பிடப்பட்டது. இது 1969ஐ விட 11.8 சதவீதமதிகமாகும். 1970இல் மொத்தத் தேசியச் செலவிலேற்பட்ட அதிகரிப்பு, நுகர்ச்சியிலும் மூலதன ஆக்கத்திலும் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. முன்னையது 7.2 சதவீதத்தால் அதிகரித்தபோது பின்னையது 10.6 சதவீதத்தால் அதிகரித்தது.

### நுகர்வோர் கேள்வி

1970இல் தனியார் நுகர்ச்சிச் செலவு ரூ. 5,330 இலட்சத்தால் அல்லது 6.3 சதவீதத்தால் அதிகரித்தது. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீதான செலவு 11.6 சதவீதத்தால் அதிகரித்தபோது இறக்குமதிகளின் மீதான செலவு 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதென்பதை நுகர்ச்சிச் செலவின் விவரம் காட்டுகின்றது. ஒப்பியல்பாக 1969இல் இவை முறையே 10.4 சதவீதமும், 32.5 சதவீதமும் கொண்ட அதிகரிப்புகளாகும். இது பின்னிணைப்பின் அட்டவணை 10இல் விவரமாகக் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை II (அ) 6

### நடைமுறை அங்காடி விலைகளின்படி தனியார் நுகர்ச்சிச் செலவின் அமைப்பு[1]

| | | தொகை | மொத்தத்தின் சதவீதம் | தொகை | மொத்தத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1. | உணவு ... ... ... | 4,373 | 52.0 | 4,658 | 52.1 |
| 2. | குடிபானங்கள் ... ... ... | 330 | 3.9 | 357 | 4.0 |
| 3. | புகையிலை ... ... ... | 400 | 4.8 | 412 | 4.6 |
| 4. | ஆடைகளும் ஏனைய சொந்தப் பொருட்களும் ... | 736 | 8.8 | 818 | 9.1 |
| 5. | வாடகை, வரி, நீர்க்கட்டணங்கள் ... ... | 387 | 4.6 | 398 | 4.4 |
| 6. | எரிபொருளும் வெளிச்சமும் ... ... | 201 | 2.4 | 212 | 2.4 |
| 7. | தளபாடம், வீட்டுப் பொருட்கள் ... ... | 198 | 2.3 | 230 | 2.6 |
| 8. | வீட்டு இயக்கங்கள் ... ... ... | 507 | 6.0 | 554 | 6.2 |
| 9. | சொந்தக் கவனிப்புகளும் நலத்துறைச் செலவுகளும் | 223 | 2.6 | 215 | 2.4 |
| 10. | போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் ... | 779 | 9.3 | 813 | 9.1 |
| 11. | பொழுதுபோக்கும் களியாட்டமும் ... ... | 387 | 4.6 | 439 | 4.9 |
| 12. | பல்வகைப் பணிகள் ... ... ... | 333 | 4.0 | 323 | 3.6 |
| 13. | வெளிநாட்டில் வதிவோர்களின் செலவு ... | 35 | 0.4 | 31 | 0.3 |
| 14. | கழிக்க: நாட்டிலுள்ள வதிவற்றோரின் செலவு | – 299 | – 3.6 | – 280 | – 3.1 |
| 15. | கழிக்க: அரசாங்க உள்ளூர்க் கொள்வனவு ... | – 177 | – 2.1 | – 234 | – 2.6 |
| 16. | குடும்பங்களினதும், இலாபமற்ற தனியார் நிலையங்களினதும் நுகர்ச்சிச் செலவு ... | 8,412 | 100.0 | 8,946 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1. இப்பகுப்பாய்வு, 'தேசியக் கணக்குகளும் அதற்குத் துணையான அட்டவணைகளும்', என்ற ஐ. நா., நியூயோர்க்கு, 1964 என்பதனை அடிப்படையாகக் கொண்டது.

1969, 1970ஆம் ஆண்டுகளில் தனியார் நுகர்ச்சிச் செலவினது அமைப்பினை மேலுள்ள அட்டவணை காட்டுகின்றது. இதிலுள்ளவாறு, கடந்த ஈராண்டுகளிலும் நுகர்ச்சியாளர் செலவின் அமைப்புக் குறிப்பிடத்தக்களவு மாற்றமடையவில்லை. 1970இல் நுகர்ச்சியாளர் செலவில் உணவு, குடிபானம், புகையிலை என்பன 60.7 சதவீதம், ஆடைகள், தளபாடங்கள், ஏனைய தனிப்பட்ட செலவுகள் என்பன 11.7 சதவீதம், போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் 9.1 சதவீதம், வாடகையும் வரியும் 4.4 சதவீதம், எரிபொருளும் வெளிச்சமும் 2.4 சதவீதம் பொழுதுபோக்கு, களியாட்டம், ஏனைய சொந்தத் தேவைகள் என்பன 11.7 சதவீதமாகவும் இருந்தன.

1970இல் தனியார் நுகர்ச்சிச் செலவிலேற்பட்ட ரூ. 5,334 இலட்சங் கொண்ட அதிகரிப்பு பின்வருமாறு பரவியிருந்தது. உடை, குடிபானம், புகையிலை என்பன 56.8 சதவீதம், ஆடைகள் 14.4 சதவீதம், போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் 5.9 சதவீதம், பொழுதுபோக்கு, களியாட்டம், ஏனைய பணிகள் 7.3 சதவீதம் ஆகும்.

**மொத்த நிலையான மூலதன ஆக்கம்**

மொத்த நிலையான மூலதன ஆக்கத்தின் மதிப்பீடுகள் பின்னிணைப்பின் அட்டவணை 7இற் கொடுக்கப்பட்டுள்ளன. 1970இல் மொத்த நிலையான மூலதனவாக்கம் ரூ. 790 இலட்சத்தால் அல்லது 3.5 சதவீதத்தால் அதிகரித்தது. அரசாங்கத் துறையின் நிலையான மூலதனவாக்கத்தில் 1.1 சதவீதங் கொண்டவோர் அதிகரிப்புக் காணப்பட்டது. அரசாங்கத்தின் நிலையான மூலதனவாக்கத்திலேற்பட்ட சிறிய அதிகரிப்பு, முக்கியமாக இலங்கை மின்சாரச் சபையினது மூலதனச் செலவைத் தற்போதைய மதிப்பீடுகளில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் துறைக்கு மாற்றப்பட்டதைப் பிரதிபலித்தது. எனவே, 1970இல் அரசாங்கத்தின் நிலையான மூலதன ஆக்கத்தின் மதிப்பீட்டை 1969இனதுடன் சரியாக ஒப்பிடமுடியாது. அரசாங்கத்துறைக் கூட்டுத்தாபனங்களில் நிலையான மூலதன ஆக்கம் ரூ. 1,250 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. 1970இல் தனியார் துறையில் நிலையான மூலதனவாக்கம் ரூ. 1,980 இலட்சத்தால் அல்லது 17.2 சதவீதத்தால் அதிகரித்தது.

**அரசாங்கத் துறை**

1969இற்கும் 1970இற்கும் இடையில் அரசாங்கத் துறையில் மொத்த நிலையான மூலதனவாக்கம் 1.1 சதவீதத்தால் அதிகரித்தது. கீழேயுள்ள அட்டவணை முக்கியமான கைத்தொழிற் பகுப்புக்களின்படி பாகுபடுத்தப் பட்ட அரசாங்கத்தின் மூலதனவாக்கத்தைத் தருகின்றது.

**அட்டவணை II (அ) 7**

**அரசாங்கத்தினது[1] நிலையான மூலதன ஆக்கத்தின் கைத்தொழிற் பாகுபாடு**

| துறைகள் | 1969 | | 1970 | |
|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் சதவீதம் |
| 1. விவசாயம், வனவியல், கடற்றொழில் ... | 193 | 34.2 | 181 | 31.8 |
| 2. தயாரிப்புத் தொழில் ... | 5 | 0.8 | 9 | 1.5 |
| 3. மின்சாரம், வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 114 | 20.1 | 40 | 7.1 |
| 4. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித்தொடர்பு | 159 | 28.2 | 168 | 29.9 |
| 5. குடியிருப்புகளின் உடைமை ... | 1 | 0.2 | 5 | 0.9 |
| 6. பொது நிருவாகம் ... | 30 | 5.3 | 62 | 10.8 |
| 7. பணிகள் ... | 63 | 11.2 | 105 | 18.4 |
| மொத்தம் ... | 564 | 100.0 | 570 | 31.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கும்.

1970இல் மொத்த முதலீட்டில் 31.8 சதவீதம் விவசாயம், வனவியல், கடற்றொழில் என்பவற்றிலும், 29.9 சதவீதம் போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், செய்தித் தொடர்பு என்பவற்றிலும் ஏற்பட்டன. இது அரசாங்க

முதலீட்டின் 61.7 சதவீதமாகும். ஒப்பியல்பாக 1969இல் இது 62.4 சதவீதமாகும். மிகுதியில் 7.7 சதவீதம் மின்சாரம் நீர், நலத்துறைப் பணிகள் என்பவற்றிலும், 10.8 சதவீதம் பொது நிருவாகத்திலும் 18.4 சதவீதம் பணிகளிலும் காணப்பட்டன.

**அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்**

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் நிலையான மூலதன ஆக்கத்தின் பரம்பல் கைத்தொழிற் பகுப்புக்களின்படி அட்டவணை II (அ) 8இல் கொடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் முதலீடு 1969இல் ரூ. 5,630 இலட்சத்திலிருந்து 1970இல் ரூ. 4,380 இற்குக் குறைவுற்றதனை இதிலிருந்து அறியலாம். இது 22.2 சதவீதங்கொண்டவொரு வீழ்ச்சியாகும்.

அட்டவணை II (அ) 8

**கைத்தொழில் வகைப்படி அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் நிலையான மூலதன ஆக்கம**

| துறை | 1968 | | 1969 | | 1970 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் |
| 1. விவசாயம் ... | 64 | 23.0 | 75 | 12.5 | 89 | 20.2 |
| 2. தயாரிப்புத் தொழில் ... | 117 | 42.0 | 223 | 39.6 | 267 | 61.1 |
| 3. போக்குவரத்து ... | 19 | 7.0 | 73 | 12.9 | 56 | 12.7 |
| 4. வர்த்தகம் ... | 64 | 23.0 | 179 | 31.8 | 18 | 4.0 |
| 5. பணிகள் ... | 14 | 5.0 | 18 | 3.2 | 9 | 1.9 |
| **மொத்தம்** ... | **278** | **100.0** | **563** | **100.0** | **438** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: 1. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் மூலதன ஆக்கம், விளக்கொத்துக்குக் கூட்டுத்தாபனங்களால் வழங்கப்பட்ட தரவுகளிலிருந்தும், அவைகளின் ஆண்டறிக்கைகளிலும், கணக்குகளிலும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்தும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2. பல கூட்டுத்தாபனங்களின் கணக்கெடுப்பு ஆண்டு, பஞ்சாங்க ஆண்டுடன் ஒத்ததாக இல்லை. ஒரு கூட்டுத்தாபனத்தின் கணக்காண்டில் ஆறு மாதங்களுக்குமேல் பஞ்சாங்க ஆண்டிற்குள் வருமிடத்து கணக்காண்டின் மதிப்பீடுகள் அப்பஞ்சாங்க ஆண்டிற்குள் அடக்கப்பட்டுள்ளன.

திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி 1969இல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் மூலதனவாக்கம் 102.5 சதவீதத்தால் அதிகரித்தது. மூலதன ஆக்கம் பற்றிய 1969இல் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளிலேற்பட்ட பெரிய அதிகரிப்புக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலதனவாக்கத்திலேற்பட்ட ரூ. 1,730 இலட்சங்கொண்ட அதிகரிப்பும், தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் ரூ. 560 இலட்சங்கொண்ட அதிகரிப்பும் முக்கிய காரணங்களாகும். இவ்வெண்தொகைகள் 1969இற்கான மதிப்பீட்டிற் சேர்ப்பதற்குக் கிடைக்கவில்லை. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் கைத்தொழில் பகுப்பின்படியான முதலீட்டின் அமைப்பு, அரசாங்கத்தினதிலிருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபட்டதாகும். மேலேயுள்ளவாறு அரசாங்கத் துறை

யில் 31.8 சதவீதமான முதலீடு விவசாயத்திலும், 29.9 சதவீதம் போக்குவரத்து செய்தித்தொடர்பிலும் காணப்பட்டன. அரசாங்கத் துறைக் கூட்டுத்தாபனங்களில், 61.1 சதவீதமான முதலீடு, தயாரிப்புத் தொழிலிலும், 20.8 சதவீதம் விவசாயத்திலும், 12.7 சதவீதம் போக்குவரத்திலும் இருந்தது.

பின்வரும் அட்டவணை அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் தனியார் துறையிலும் முதலீட்டின் பரம்பலை இருப்புச் சொத்து வகைப்படி காட்டுகின்றது.

### அட்டவணை II (அ) 9

### இருப்புச் சொத்துக்களின் வகைப்படி தனியார் துறையினதும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் நிலையான மூலதனவாக்கம்

| இருப்புச் சொத்தின் வகை | 1969 | | | | 1970 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | | தனியார் துறை | | அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | | தனியார் துறை | |
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் |
| பெருந்தோட்டச் செய்கையும் காணி அபிவிருத்தியும் ... | 17 | 3.0 | 78 | 6.8 | 32 | 7.3 | 82 | 6.1 |
| கட்டடமும் ஏனைய கட்டடவாக்கமும் ... ... | 139 | 24 7 | 674 | 58.7 | 154 | 35.2 | 814 | 60.4 |
| பொறித் தொகுதியும் எந்திரங்களும் ... | 318 | 56.5 | 62 | 5.4 | 176 | 40.3 | 146 | 10.8 |
| போக்குவரத்துக் கருவிகள் ... ... | 75 | 13.3 | 250 | 21.7 | 57 | 13.1 | 187 | 13.9 |
| ஏனைய மூலதனப் பொருட்கள் ... ... | 14 | 2.6 | 86 | 7.5 | 18 | 4.1 | 118 | 8.8 |
| **மொத்தம்** ... ... | **563** | **100.0** | **1,149** | **100.0** | **438** | **100.0** | **1,347** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: 1. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் மூலதனவாக்கம், விளுக்கொத்துக்குக் கூட்டுத்தாபனங்களால் வழங்கப்பட்ட தரவுகளிலிருந்தும், அவைகளின் ஆண்டறிக்கைகளிலும், கணக்குகளிலும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்தும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2. பல கூட்டுத்தாபனங்களின் கணக்கெடுப்பு ஆண்டு, பஞ்சாங்க ஆண்டுடன் ஒத்ததாகவில்லை. ஒரு கூட்டுத்தாபனத்தின் கணக்காண்டில் ஆறு மாதங்களுக்கு மேல் பஞ்சாங்க ஆண்டுக்குள் அமைகின்றபோது, கணக்காண்டின் மதிப்பீடுகள் அப்பஞ்சாங்க ஆண்டிற்குள் அடக்கப்பட்டுள்ளன.

1970இல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டில் 35.2 சதவீதத்திற்குக் கட்டடவாக்கம் வகைகூறியது. மொத்த முதலீட்டில், பொறி, எந்திரம் என்பவற்றில் முதலீடு 40.3 சதவீதமாகவும், போக்குவரத்துச் சாதனங்களில் முதலீடு 13.1 சதவீதமாகவும் இருந்தன. 1970இல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் மூலதன ஆக்கம் ரூ. 1,250 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. முதலீட்டிலேற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக வர்த்தகம், போக்குவரத்து, பொறியும் எந்திரமும், பணிகள் என்பவற்றிலேற்பட்டது. இதற்கு இறக்குமதிகள் அளவிலேற்பட்ட வீழ்ச்சி பெருமளவு காரணமாகும். கட்டடவாக்கம், விவசாயம், கைத்தொழில், ஏனைய மூலதனப் பொருட்கள் என்பவற்றின் முதலீட்டில் அதிகரிப்புகள் காணப்பட்டன.

**தனியார் துறை**

தனியார் துறையினது மூலதன ஆக்கத்தின் பரம்பல் இருப்புச்சொத்து வகைப்படி அட்டவணை II (அ) 9 இற் காட்டப்பட்டுள்ளது. 1970இல் தனியார் துறையின் மொத்த மூலதன ஆக்கத்தில் 60.4 சதவீதம் கட்டடங்களும் ஏனைய கட்டட ஆக்கங்களுமாகும். பொறி, எந்திரம் என்பவற்றில் முதலீடு 10.8 சதவீதமாகவும், போக்குவரத்துச் சாதனங்களில் 13.9 சதவீதமாகவும் இருந்தது. 1970இல் தனியார் துறையின் மொத்த முதலீடு ரூ. 1,980 இலட்சத்தால் அதிகரித்தது. கட்டடம், கட்டடவாக்கம் என்பவற்றில் முதலீடு ரூ. 1,400 இலட்சத்தாலும், பொறி எந்திரம் என்பவற்றில் முதலீடு ரூ. 841 இலட்சத்தாலும் அதிகரித்தபோது, போக்குவரத்துச் சாதனங்களின் முதலீடு ரூ. 630 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது. போக்குவரத்துச் சாதனங்களின் முதலீட்டிலேற்பட்ட வீழ்ச்சிக்கு இவற்றின் ஏற்றுமதிகளிலேற்பட்ட வீழ்ச்சி காரணமாகும். 1970இல் தனியார் துறை முதலீட்டின் அதிகரிப்பின் 41.3 சதவீதம் கட்டடவாக்கத்திற் காணப்பட்டது; இது கட்டடவாக்கத்துக்கான அதிகரித்த கேள்வியையும், கட்டடப் பொருட்களின் பெருமளவிலான கிடைப்பனவையும் பிரதிபலிக்கின்றது.

**மொத்த உள்ளூர்ச் செலவில் இறக்குமதிகளின் பங்கு**

அண்மையாண்டுகளில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்கவோர் அடிப்படை மாற்றம் மொத்த உள்ளூர்ச் செலவின் இறக்குமதிப் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். இப்போக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்ளூர் உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாகும். மொத்த உள்ளூர்ச் செலவில் இறக்குமதிகளின் பங்கினைப் பின்னிணைப்பு அட்டவணை 12 காட்டுகின்றது. 1968இல் 16.5 சதவீதமாகவும் 1969இல் 16.8 சதவீதமாகவும் இருந்த தனியார் நுகர்ச்சியினது நேரடி இறக்குமதிப் பங்கு 1970இல் 15.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. கொ. கா. க. விலைகளில் அளவிடப்பட்ட மூலதன ஆக்கத்தின் இறக்குமதிப் பங்கு 1969இல் 27.1 சதவீதத்திலிருந்து 1970இல் 21.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.